மாதர் போதினி

No. 241 ஜனுவரி 1918 No. 1

A MESSAGE FOR THE NEW YEAR

புது வருஷ செய்தி

எழும்பிப் பிரகாசி

ஒருவருக்கொருவர் புதுவருஷ வாழ்த்துதல் அனுப்புமாப்போல், மாதர் போதினி, இவ்வருஷத்தில் தேவாசீர்வாதம் மென்மேலும் பெருக உண்டாக உங்களை வாழ்த்தி, 'எழும்பிப் பிரகாசி' என்ற சுபசெய்தியை உங்களுக்கு அனுப்புகிறாள்.

நீ கிறிஸ்துவை எற்றுக்கொண்டதுண்டானால் உன்னில் ஒரு வெளிச்சமுண்டாயிருக்கும். 'உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடி எச்சரிக்கையாயிரு' என்பது ஆண்டவருடைய வார்த்தை. கடந்த வருஷங்களில் உன்னிலுள்ள வெளிச்சம் பிரகாசமடைந்திருக்கிறதோ மங்கியிருக்கிறதோ? மனுஷர் உன்னிலுள்ள வெளிச்சத்தைக் கண்டு பரலோகத்திலுள்ள உன் பிதாவை மகிமைப்படுத்தத்தக்கதாய் நடந்திருக்கிறாயோ அல்லது உன்னிலுள்ள வெளிச்சம் மங்கிப் போனதால் மனுஷரை வழிதப்பிப்போகச் செய்திருக்கிறாயோ? அமர்ந்திருந்து சிந்தித்துப்பார். ஒரு தீபஸ்தம்பத்தின் வெளிச்சம் மறைந்துவிட்டால் கப்பல்களுக்கு அபாயம் நேரிடும். ஒவ்வொரு கிறிஸ்தவ மாதும் ஓர் தீபஸ்தம்பந்தான். உன்னிலுள்ள வெளிச்சத்தால் உலகமாகிய சாகரத்தில் வழிதப்பியலையும் ஆத்துமாக்கள் கிறிஸ்துவண்டை நடத்தப்படலாம்; அல்லது, உன் வெளிச்சம் கவலையீனத்தாலும், உலகப்பற்றாலும், ஜெபம், வேத ஆராய்ச்சி, தியானம், ஆராதனை முதலிய கிருபையின் எத்தனங்களைச் சரியாய் உபயோகியாததாலும் மங்கியிருக்குமானால், உன் மூலமாய்க் கிறிஸ்துவண்டைவந்து சேரக்கூடிய ஆத்துமாக்கள் வழிதப்பிக் கெட்டுப்போக எதுவாகலாம். சகோதரியே, உன் வெளிச்சம் எப்படிப்பட்டது?

VOL. XXXIII.

Acc. No: 160959
No. of Pages 382

நமது அருமை ரட்சகர் சொன்னபடி விளக்கைக் கீழே வைக்காமல் தண்டின்மேல் வைக்கவேண்டும். உன் வெளிச்சத்தை உயர்விடத்தில் வைக்காமல் தரைக்குக் கொண்டுவருவது எது? பூமிக்கடுத்த காரியங்களாகிய நிலையற்ற பொருளிலும் அற்ப இன்பங்களிலும் உன் இருதயத்தைப் பற்றச்செய்வாயானால், உன்னிலுள்ள வெளிச்சம் கீழ் நோக்கித் தரைமட்டும் இறங்கி பிரயோஜனப்படாது. நீ பரமகாரியங்களில் வாஞ்சை வைத்தால் மாய்கையான பாவலோகத்திலிருந்து மேற்கிளம்பி தண்டிலேற்றப்பட்ட தீபம்போல் பிறருக்குப் பயன்படுவாய். இன்னும் கிறிஸ்தவ உன்னத ஜீவியத்தில் நாட்டங்கொண்டு இயேசுவையே நோக்கி நடப்பாயாகில், மலையின்மேலுள்ள வெளிச்சம்போல் அநேகருக்குப் பயன்பட்டு கிறிஸ்துவை மகிமைப்படுத்துவாய்.

இதை வாசிக்கிற சகோதரியே, இப்புது வருஷத்தில் உன் வெளிச்சம் ஜுவாலித்து எழும்ப விரும்புகிறாயா? அப்படியானால், தனித்து அறைக்குட் புகுந்து, கேட்கிற யாவருக்கும் நல்ல ஈவுகளைக் கொடுக்கிற உன் பரமபிதாவிடத்தில் பரிசுத்த ஆவியானவருக்காக மன்றாடு. இவ்வரம் உனக்கு நிறைவாய்க் கிடைத்தால் உன் வெளிச்சம் ஜுவாலித்தெழும்பும். உன் தேசத்தாரும், உன் பிள்ளைகளும், உன்வீட்டார் யாவரும் உன்னிலுள்ள வெளிச்சத்தைக்கண்டு கிறிஸ்துவண்டை வந்து சேருவார்கள். கிறிஸ்துவுக்காகப் பிரகாசிக்க வேண்டுமென்ற உத்தம வாஞ்சையோடு, பிறாதியாது தனித்து ஊக்கமாய் ஜெபித்தால், வெளியரங்கமாய் யாவருங் கண்டு பிரயோஜனமடையத்தக்க எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருப்பாய் என்பது நிச்சயம். நீ உனக்கும் உன் வீட்டாருக்கும் பிறருக்கும் ஆசீர்வாதமாயிருக்க விரும்பினால் இந்த நற்செய்தியை ஏற்றுக்கொள்.

ஆண்டவருக்காய் அன்பரே!
மாண்பாய் நல்லாவியுடனே,
உம் தீவட்டியோடெழும்பி,
உற்சாகமாய்ப் பிரகாசிப்பீர்!

எழும்பிப் பிரகாசி,
நல்லாவியின் ஒத்தாசையால்.
எழும்பிப் பிரகாசி,
இயேசுவின் மகிமைக்கென்றே.

MOTHER'S LOVE

தாயின் அன்பு

உலாந்து தேசத்தில் நாரை என்றழைக்கப்படும் பட்சிகள் வீட்டுக் கூரைகளிற் கூடுகெட்டி வாசஞ்செய்யும். ஜீவப்பிராணிகள்மீது கருணைகூர்ந்த டச்சுக்காரர் தங்கள் வீட்டின்மேல் வசிக்கும் இப் பறவைகளைக் கலைக்காமல் பயமின்றிக் கூரைமேல் தங்கவிடுவார்கள். திடீரென்று தீப்பற்றி ஒருநாள் அநேக வீடுகள் வெந்துபோயின. மறுநாள் ஒரு துரை நெருப்பினால் தகிக்கப்பட்டு சாம்பலான வீடுகள்மேல் நடந்துசெல்லுகையில் ஒரு நாரை தன் சிறகுகளை விரித்த வண்ணமாய் செத்துக்கிடக்கக் கண்டு, தன் கையிலிருந்த தடியால் அதைப் புரட்டித் தள்ளினார். அப்பொழுது யாவரும் வியக்கத்தக்க தாய் அதின் செட்டைக்குள்ளிருந்து ஒரு உயிருள்ள குஞ்சு ஓடினது. துரை அதைப் பிடித்து தன் வீட்டுக்குக் கொண்டுபோய்ப் பத்திரமாய் வளர்த்து அதின் சரித்திரத்தை எல்லாருக்கும் சொன்னார். கேட்ட யாவரும் தன் குஞ்சுக்காக உயிரைக்கொடுத்த தாய்ப்பட்சியின் அன்பை வியந்து கொண்டாடினார்கள்.

நம்மைத் தன்னயமின்றி நேசிக்கிற தாயின் அன்புக்கிணையான அன்பை உலகத்தாரில் காண்பதரிது. 'ஒரு தாய் தான் பெற்ற பால

களை மறப்பாளோ?' என்று சத்தியவேதத்தில் சொல்லியிருக்கிறது மன்றி அவளுடைய அன்பிலும் தேவனுடைய அன்பு பெரியது என்று காட்ட, 'அவள் மறந்தாலும் தேவன் உன்னை மறக்கமாட்டார்' என்று கூறுகிறது.

ஆ! அறிவுக்கெட்டாத தேவனுடைய அன்பின் மகத்துவத்தைச் சிந்திப்போமாக.

'தாயின் மிக்க பாசமும்
ஆபத்தாலே குறையும்,
குன்றமாட்டா தென்றுமே
ஒப்பில்லா என் நேசமே.'

'HE THAT LOSETH HIS LIFE SHALL SAVE IT'

மற்றோரை மீட்கப்போய்த் தன்னுயிரைக் காத்த கதை

இந்திய கிறிஸ்தவ சந்நியாசி ஒருவர் திபத்து தேசம் நோக்கிச் சென்றார். அவர் போகும் வழியில் எங்கும் கிறிஸ்துவை வாய் வார்த்

தையினல் மாத்திரமல்ல செய்கிரிஞ-ளினுலும் பிரசங்கித்தார். ஒருநாள் அவரும் அவர் தோழனுமாக ஹிமாலய பர்வதத்தின் உறை பனிவழியே போக நேர்ந்தது. அங்கேயோ தாங்கொணு குளிர், செங்குத்தான குன்றுகள், மோசம் மிகுந்த பாதை. செங்குத்தான குன்றின் அடிவாரத்தினின்று ஓர் அழுகுரல் பிரயாணிகளின் காதில் திடீரெனத் தொனித்தது. இருவரும் திடுக்கிட்டு நின்றூர்கள். கிறிஸ்தவ சந்நியாசியார், 'சங்கடத்திலகப்பட்ட ஒருவரின் குரல் இது. மலையினின்று யாரோ தவறி விழுந்துவிட்டார்' என்றூர். அவர் தோழனும் அவ்வாறே எண்ணினுர். எனினும் தம் பாதையே பிடித்துச் சென்றூர். சந்நியாசியாரோ, 'நாம் அவனைத் தூக்கிவிட வேண்டும்' என, மற்றவர், 'அப்படியானல் நாமிருவரும் சாவது நிச்சயம்' என்றூர். சந்நியாசியார், 'நான் அவனைச் சாகவிட்டுப்போக முடியாது, உதவிபுரியத்தான் வேண்டும்' எனத் திட்டமாய் உரைத்தார். அவர் தோழனே, 'உமது விருப்பம் இதுவானுல் நான் உம்மை உமது புத்தியீனத்துக்கே விட்டுப்போகவேண்டியதுதான்' என்று சொல்லி முன்சென்றூர். துறவியார் மலைச்சாரலில் மிகுந்த கஷ்டப்பட்டு இறங்கி, ஒருவன் கால் ஒடிந்து விழுந்துகிடப்பதைக் கண்டார். அவனை உயர கொண்டுசேர்க்க, அவனைத் தூக்கிச் சுமக்கவேண்டிய தவசியமாயிற்று. அவ்வாறே சந்நியாசியார் அவனை முதுகுமேல் சுமந்து எப்படியோ பாதை வந்து சேர்ந்தார். அவர் பட்டபாடு கொஞ்சமல்ல, அங்கமெல்லாம் புழுங்கி மிகுந்த உஷ்ணமாயிற்று. அவர் அவனுக்குக் கைலாகு கொடுக்க இருவரும் மெதுவாய் வந்து சென்றூர்கள். இவ்விருவரும் எடுத்த பிரயாசையால் இரத்தம் தேகமெங்கும் விரைந்து பரவலாயிற்று. சிறிதுதூரம் சென்றபின் அவர் கண்ட காட்சியென்ன? இவரைத் தனியே விட்டுப்போன பிரயாணி குளிரால் விறைத்து மரித்துக்கிடப்பதைப் பார்த்தார்கள். இதைக்கண்ட சந்நியாசியார் தாம் தூக்கி எடுத்தத் தம் தோழனுக்குச் சொல்லலானுர்; 'நானும் இவரோடு இங்கு குளிரால் செத்துக்கிடந்திருக்கவேண்டும். ஆயினும் உன்னை ரக்ஷிக்க எடுத்த பிரயாசையினுல் நான் உயிர்பிழைத்தேன். எடுத்த முயற்சியினுல் தேகத்தில் உஷ்ணம் மிகுந்தது. குளிரினின்று தப்பினேன். மரணத்தினின்று என் உயிரை ரக்ஷித்தேன்.'

இச்சரிதை வாஸ்தவ சம்பவமே. வட இந்தியாவில் இச்சந்நியாசியாரை அறியாதார் வெகு சிலரே. நமது ஆத்மீக ஜீவியத்தை நன்கு விளக்கும் உவமையும் இது. மற்றவரை ரக்ஷிக்கும்பொருட்டு நாம் உழைக்கும்போது நம்மையே நாம் ரக்ஷித்துக்கொள்ளுகிறோம். நம்மைச் சுற்றி நாசமுறும் மனுக்குலத்தை மீட்க நாம் வேலைசெய்யும்

போது நமது ஆத்தும[illegible]கயே மீட்டுக்கொள்ளுவோம். நம்மயலாரின் ரக்ஷிப்புக்கென்று நம்மையே ம[illegible]விட்டு முற்றுமாய் அவர்பொருட்டுத் தியாகஞ்செய்ய இக்காரணங்கள் நம்மை ஏவுகின்றனவன்றோ?

A WOMAN'S CHRISTIAN INFLUENCE

ஸ்ரீமத் ஜகத்தரணி

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு லக்னவ் நகரில் மகேஷ் சந்திர சாட்டர்ஜி என்னும் பங்காள பிராமணரொருவர் வசித்து வந்தார். இவருக்கு குழந்தைகள் ஒரு ஆணும் இரண்டு பெண்களுமே. இவர்களுடன் தன் நாயகனை இளமையில் இழந்த ஓர் சகோதரியுமிருந்துவந்தாள். மகேஷ் பாபு சர்க்கார் கஜானா ஆபீஸில் தலைமை விகிதராய் உத்தியோகம் பெற்றதின்நிமித்தம் ஜனங்களுக்குள் அதிக செல்வாக்கு உடையவராகவே இருந்தார். ஹிந்துமார்க்கத்தில் அதிக பிடிவாதம். ஆகவே இதர உண்மைகளைச் சற்றேனும் தாராளமாய் கண்ணுறார். இவர் மனோபாவம் இவ்வாறிருக்க ஸ்ரீமத் ஜகத்தாரணியம்மாள் என்னும் இவர் பத்தினி ஒரு ஜெனானா மிஷனரியிடம் சுவிசேஷ உண்மையைக் கற்று இயேசு பெருமானுக்கு இரகசிய பக்தி செலுத்திவருவாராயினர். இவ்வம்மையார் பலராலும் பலமுறையும் கிறிஸ்தவ சபையில் சேரத் தூண்டப்பட்டபோதிலும் தம்மருமை மக்கட்கு தம் கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும், கூடுமானால், எல்லாரையும் இரட்சகரிடம் இழுக்கும் நிமித்தம் தம்மில்லத்திலேயே இருக்கத் தீர்மானித்தனர். பின் நிகழும் சம்பவங்கள் இத்தீர்மானத்தின் பயனே. இவ்வம்மையாரின் ஜீவியத்திலுண்டான மாறுதல் பற்பல வழிகளிலும் காணப்பட்டன. குடும்பத்தில் விக்கிரகபூஜையை அசட்டைபண்ணினர். பண்டிகைகளுக்கு ஆர்ப்பாட்டமாய் தயாரிப்பதையும் குடும்பகாரியங்களுக்கு தம்மகத்து புரோகிதனிடம் ஜோசியம் கேட்பதையும் தற்சொரூபமாய் ஒழித்தனர். இவற்றையெல்லாம் கண்ணுற்ற தம் கணவன், மனதில் சந்தேகம் கொள்ளாரோ? ஆகவே இச்சம்பவத்திற்குக் காரணமாயிருந்த மிஷனரி தம் மனைவியை அணுகாவண்ணம் ஏற்பாடுகள் செய்தனர். தாமும் முன்னிலுமதிகமாக கிறிஸ்தவமார்க்கத்திற்கு விரோதியுமானார். இவ்வாறு காலம் கழிய, இவருக்கு இன்னும் இரண்டு பெண்கள் பிறந்தனர். ஒரு வெளிப் பயனும் தோன்றவில்லை. அவ்வம்மையாரின் இரகசிய பக்தி குறைந்து பழையபடி ஹிந்துமார்க்கத்தினுட் புகுந்தனரோ என்று அநேகர் பயப்படலாம். ஆனால் விசேஷமான சம்பவம் ஒன்று

நிகழ்ந்தது. மகேஷ் சந்திருடைய குமாரர் சுரேந்திரனாத் என்பவர் தம் தகப்பனார் தம்மைத் தடுக்கச் செய்த பிரயத்தனங்களை யெல்லாம் மீறி ஒரு பாதிரியார் பள்ளிக்கூடத்தில் கல்விகற்கப் பிரவேசித்தனர். கொஞ்சகாலஞ் சென்றவுடன் குடும்பமே அலகபாத்துக்குப் பெயர்ந்தது. அவ்வளவு பெரிய வீட்டில் குடும்பத்தினுள் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு அனுகூலமாய் நடந்துவந்த மெதுவான குழப்பம் ——— நின்றுவிடும்போல் தோன்றிற்று, ஆனால் அப்படி நிற்கவில்லை; ஸ்ரீமத் தாரணியம்மாள் எவ்வளவு தம் குடும்பத்திற்கு கிறிஸ்துவைக் காண்பித்துக்கொண்டே வந்திருக்கிறாரென்பது பின்னால் தோன்றின பலன்களால் நன்குவிளங்கும். தம் குமாரத்திகளில் இருவருக்கு மிகவும் பிடிவாதமான ஹிந்து மாப்பிள்ளைகள் கிடைத்து, தம் சம்மதமின்றி விவாகம் நடந்தேறியபோதிலும் இப்பெண்களும் இரட்சகரில் விசுவாசம் குறையாமல் தங்கள் கணவர்களையும் கிறிஸ்துவுக்கு சொந்தமாக்கவே தீர்மானித்து வாழ்ந்துவந்தார்கள். ஒருநாள் சுரேந்திரனாத் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமையிருந்ததால் லக்னவுக்கு ஓடிப்போய் தாம் முன்பு கல்விகற்ற மிஷன் கல்லூரி தலைமை உபாத்தியாயரை ஞானஸ்நானம் கேட்டார். அப்படியே அவர் இன்னுமதிகமாய் உபதேசிக்கப்பட்டு பெரிய ஜனக்கூட்டத்தின் முன்பாக ஞானதீட்சை பெற்றார். மேலும் தம் கல்வி முடிப்பதற்கு இரண்டு வருஷங்கள் அவ்விடம் தங்கினார். முடிந்தவுடன் போலீஸ் ஆபீஸில் விகித உத்தியோகம் கிடைத்து, நற்குணமுள்ள ஒரு கிறிஸ்தவ பெண்ணை மணம்புரிந்தார். அதே டிபார்ட்மென்டில் தலைமைக்கும் உயர்ந்தார். பதினைந்து வருடங்கள் சர்க்காருக்கு நல்ல வேலை செய்து, எம்பெருமானுக்கு நேராய் சேவைசெய்யும் வண்ணம் தம்மை தியாகம்பண்ணி சுயதேச மிஷனரிசங்கத்தில் அமர்ந்தார். நுக்கர் தாலூகாவில் வேலைசெய்து வருகிறார்.

அவருக்குப் பின்னால் மகேஷ் சந்திராவின் தங்கையாகிய இளம் விதவையும் இன்னும் விவாகமற்ற குமாரத்திகளிருவரும் சபையிற் சேர்ந்தனர்.

விவாகமான பெண்களில் ஒருவருக்கு ஓர் சந்தோஷகரமான அனுபவம் உண்டாயிற்று. தம் கணவர் ஜோதிஷ் சந்திர கோசுவாமிக்கு டாக்டர் வேலை. இவருக்குக் கிறிஸ்தவ மார்க்கத்தின்மேல் அதிக வெறுப்பு. இப்படியிருக்க ஒருநாள் தம் மனைவிக்கு நோய் கண்டு அநேக நாட்களாய்ச் சுகமாகாமலிருந்தது. மனுஷ அவுஷத பிரயத்தனங்களெல்லாம் வீணாயின. மரணத்துக்கும் இவ்வம்மைக்கும் வெகுதூரமில்லையென்றே எல்லாரும் கூறினர். தமக்கு அதிக உள்ளன்போடு சிஸ்ரூஷை பண்ணிவந்த தம் மனைவி உயிர்துறக்கப்

போகிறதைக் கண்ணுற்று கோசுவாமி துக்கசாகரத்தில் அமிழ்ந்தனர். இந்த விசனகரமான நிலையில் தம் மனைவி தம்மை அழைப்பித்து, 'கிறிஸ்துவாகிய கடவுளை நோக்கிப் பிரார்த்திப்போம். அவர் என்னை சுகமாக்கினால் அவருக்குத் தொண்டர்களாவோம்' என்று புகல, கோசுவாமியும் மருந்து பிரயோக[illegible] நிறுத்திவிட்டு தெய்வ [illegible] [illegible] மகாகாங்கின்றனர். நூதனமான ஆக்கிரத்தோடு பலனை எதிர்பார்த்திருந்தார்கள். கொஞ்சங் கொஞ்சமாய் உயிர் துறக்கும் தருணத்திலிருந்த தன் நாயகி பூரண சௌக்கியமடைந்ததைக் கண்ட நாயகன் மனதில் பெரிய மாறுதல் உண்டாயிற்று. அவருக்கு மருந்தின்மேல் நம்பிக்கையற்றதுமன்றி தம் தொழிலிலும் பிரியமில்லாமற்போயிற்று. தாம் பரோபகாரமாய் உழைத்தல் வேண்டுமென்ற உயர்தரம் அமைந்த உத்தரவாதத்தால் தூண்டப்பட்டார். தாம் வசித்த ஊரில் தம் காரியத்தைச் சொல்லுவதற்கு ஒரு கிறிஸ்தவ குருவும் இல்லையாதலால், தம் மனைவியை அழைத்துக்கொண்டு தாம் முன்பு கிறிஸ்தவமார்க்கத்தினிமித்தம் திரஸ்கரித்த தம் மைத்துனனிடம் சென்று தாம் கண்ட அற்புதத்தையும், வந்த நோக்கத்தையும் சொன்னார். இது நிற்க, முக்தியில் பண்டித ராமாபாய் விதவைகளுக்காக வைத்திருக்கும் ஜாகை மாதிரி அலகாபாத்திலே சக்கரபத்தி அம்மாள் ஒன்று சிறு அளவில் எற்படுத்தியிருக்கிறார்கள். அவ்விடம் நடந்த கூட்டங்களில் ஆச்சரியமான புதிய ஆவியின் பலம் காணப்பட்டது. அங்கிருந்து இத்தருணத்தில் சகோதரிகளில் ஒருவர் வந்து சேர்ந்தார். ஒருநாள் சாயங்காலம் எல்லாரும் ஜெபத்தியானத்திற்குக் கூடியிருக்கும்பொழுது பெந்தெகோஸ்து நாளில் மேல்வீட்டில் எப்படி ஆவியின் சூலம் தோன்றிற்றோ அப்படியே இவர்களுக்குமிருந்தது. கோசுவாமியும் மனைவியும் பரிசுத்தாவியாலும் ஜலத்தாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். இந்த நாளிலிருந்து இவர்கள் சந்நியாசி உடை தரிக்காவிட்டாலும் கடவுள் எங்கே நடத்தினாலும் போயும் அவரையே தங்களுடைய லௌகிக தேவைகளுக்கு முற்றும் நம்பியும் பாபாத்துமாக்கள் ஈடேற்றமடையும் பொருட்டு சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டு உண்மை சந்நியாசிகளானார்கள்.

விவாகமான மற்ற குமாரத்திக்கு வேறே ஒரு அனுபவமிருந்தது. இளமையில் கணவர் காலமாய்விட்டதால் அவர் கிறிஸ்தவராகக் கூடாததைக்கண்டு அம்மையாருக்கு அதிக விசனம். தாமும் தம் ஒரே பையனுமாக ஞானஸ்நானம் பெற்றனர். பையன் சிறுவனாயிருந்தமையின் அலிப்பூர் ஸெஷன்ஸ் கோர்ட்டில் இவ்வம்மையின் நாயகனுடைய பந்துக்கள் பெரிய வியாஜ்ஜியம் போட்டு பையனை மீண்டும்

ஹிந்துமார்க்கத்தில் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் தாயே அவனை பாதுகாத்துக்கொள்ளுவதற்கு அனுமதி கிடைத்தது.

இது நிற்க, நாம், அன்னையையும் தந்தையையும்பற்றி சற்றுக் கூறுவோம். தந்தை எப்பொழுதும்போலக் கடினமாகவும் கொஞ்சங் கூட இடங்கொடாமலும் இருந்தார். மேலும் தம் குழந்தைகளெல்லாம் ஒவ்வொன்றாய்க் கிறிஸ்தவசபையில் சேரத் தம் மனைவி கிறிஸ்தவ பாதிரியைப்போல் இருந்ததைக்கண்டு அதிகம் அதிகமாகக் கிறிஸ்தவ மார்க்கத்தின்மேல் கசப்பாயினர். இந்த நாட்களிலே இவ்வம்மை தனிமையையும் நாயகனுடைய துன்பங்களையும் எவ்வளவு சகித்திருந்தார்களென்பது நாம் கவனிக்கற்பாலது. ஆனாலும் நாயகன் பக்கத்திலேயிருந்து அவர் கிறிஸ்துவைக் காணவேண்டுமென்று ஜெபித்தும் சகித்தும் காத்திருந்தார்கள். கடைசியாக, இவ்வம்மை ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு அவரைத் திருப்புவதற்கு அதிக விடாமுயற்சியாயிருந்தனர். இவ்வம்மையின் முயற்சியெல்லாம் வீணாயின. அவரும் மூன்று வருடங்கள் கழித்து தேகவியோகமானர். அதிலிருந்து இவ்வம்மை தம் வாழ்நாட்களை, இடைவிடாமல் ஆத்துமாக்களை எம்பெருமானுக்குச் சொந்தமாக்குவதிலேயே, நாம் வாயினல் புகழக்கூடாதபடி செலவழித்து வருகின்றனர்.

ஜே. தேவதாசன்,
பெரய்லி.

PRAYER FOR PEACE

சமாதானத்திற்காக ஜெபம்

இராகம், பியாகு.] [ரூபகதாளம்.

பல்லவி

இத்தருணம் எழுந்தருள்க,
எங்கள் மா தேவா,
நின் தொண்டரைக் காவா.

அனுபல்லவி

சத்துருக்களின் சதியோசனை
தாறுமாறாக;—சமா
தானமே ஓங்க.— இத்.

சரணங்கள்

1. மூன்றாண்டு மிகு மும்முரமாக மூண்டதே சண்டை; பகை
மூட்டிய மூர்க்கர்கள் தோற்றோடிப் போவதால்
யுத்தம முடிய ;—வெற்றிச்
சத்தந் தொனிக்க.— இத்.

2. நீதிக்குங் கொடும் அநீதிக்குமே நேர்ந்ததே சண்டை; நித்தம்
நீதிக்குப் பகைஞராக விளங்கும்
நீசர் தாழ்ந்திட ;—நீதி
நேசர் வாழ்ந்திட.— இத்.

3. சர்வதேச சர்வஜனங்களும் சோதரராக; எங்கள்
சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி
தீர்க்காயுள் பெற; உம்மைத்
தோத்திரித்துப் பாட.— இத்.

Y. G. Bonnell, P. B.

CHILDREN'S PAGE

பாலர் பக்கம்

மங்களபுரி யென்னுமோர் சிற்றூரில் சுவிசேஷமுத்து என்ற ஒரு நாட்டையர் இருந்தார். அவருடைய வீடு ஒரு தென்னந்தோப்புக்குள்ளிருந்தது. பூச்செடிகளும் அவர் வீட்டுக்குமுன்னே வைக்கப்பட்டு பார்ப்பதற்கு வெகு அலங்காரமாயிருந்தது. அவருக்கு மூன்று பெண்களும் இரண்டு ஆண்களும் பிறந்திருந்தார்கள். கடைசிப் பெண்பிள்ளையின் பெயர் மரகதமணி. இவளுடைய் தாயார் இக்குழந்தையின்பேரில் அதிக பட்சமாயிருப்பார்கள், அவள் தந்தையும் அப்படியே. மற்ற நால்வரும் பட்டணத்துக்குப் படிக்கப்போய்விட்டதனால் இந்தப் பெண்ணே வீட்டுப் பெண்மணியாயிருந்தாள். சிவந்த நிறமும் கருமையான கூந்தலும் அழகிய முகமுமுடைய இச்சிறுமியினுருவம் வீட்டுக்கு வருபவர்களையெல்லாம் சந்தோஷக்கடலிலாழ்த்தும். வருகிறவர்களெல்லாரும் பெண்மணி, கண்மணி, மரகதமணி யென்று தாவியெடுத்து முத்திகொடுக்காது போவதில்லை. இவளுக்கு ஆறு வயதானவுடனே இனிமையான பாடல்களைப் பாடுவதிலும் வேதகதைகள் வசனங்கள் சொல்வதிலும் தேர்ந்துவிட்டான். சாயரட்சை பாடசாலை முடிந்தவுடனே சிறுவர் சிறுமிகளெல்லாம் நாட்டையர் வீட்டுப் பூந்தோட்டத்திலே கூடுவார்கள். நல்ல இராகமுள்ள பாடல்களையெல்லாம் மரகதம் பாடுவாள். அவளுடைய தந்தையும் ஒரு நேர்த்தியான வீணை வாங்கிக்கொடுத்திருந்தார். அதிலும்

இப்பெண்மணி நாளுக்குநாள் தேர்ந்துவிட்டாள். வருஷாவருஷம் பரீட்சைகளிலும் தேறிவந்தாள். பன்னிரண்டாவது வயதிலே எட்டாவது வகுப்பு பாஸ்பண்ணிவிட்டாள். இவள் வீட்டிலிருந்த காலத்தில் விசேஷமாக நவம்பர், டிசம்பர் மாதகாலம் இவளுக்கு அதிகப் பிரியமுண்டாக்கும். குளிர்ந்த காற்று வீசுவதும், செடிகள் புஷ்பிப்பதும், பசும்புல் எங்குந்தோன்றுவதும், சீக்கிரத்தில் கிறிஸ்மஸ் பண்டிகை வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பதும் இவளுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கும். தனது தமையன்மாரும் தமக்கைமாரும் உடுப்பும், புஸ்தகமும், விளையாட்டுக்குரிய நூதன சாமான்களும் வாங்கிக்கொண்டு வருவார்கள் என்ற ஆவல் அதிகம். தனது தாயிடம் சென்று புதுப்பாடல்கள் அமைத்துத்தரும்படி கேட்டு அவைகளை வீணையிலிட்டுப் பாடித் தனது தோழிகளுக்கும் சொல்லிக்கொடுப்பாள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சிறுவர் கூட்டம், நாட்டையர் பூந்தோட்டத்தில்தான் நடைபெறும். வாரந்தோறும் சேருகிற காணிக்கைகளையெல்லாம் பத்திரமாய்ச் சேர்த்துவைத்தாள். நூதனபாடல்களையும் சம்பாஷணைகளையும் தனது தோழர்களுக்குக் கற்றுக்கொடுத்தாள். கிறிஸ்மஸ் தினத்திலே சந்தோஷமான ஆராதனை நடத்தி சேர்த்துவைத்த காணிக்கைகளுக்குத் தின்பண்டங்கள் வாங்கி ஏழைச் சிறுவர்களுக்குக் கொடுத்துக் கிறிஸ்துவைக் கூற வேண்டுமென்றே இந்த ஒழுங்குகளைச் செய்தாள். இதை யறிந்த பெற்றோர்களும் மற்றவர்களும் இவள் முயற்சியை அதிகமாய் மெச்சித் தாங்களும் பொருளுதவிசெய்தனர். பட்டணமிருந்து வந்த தமையன் தமக்கைமாரும் இவள் திறமையை மெச்சினார்கள். பிற்காலத்திலே இவள் உயர்தர கலாசாலையில் தேறி சிறந்த பண்டிதையாகி ஒரு பெண்கலாசாலையின் விசாரணைக்கர்த்தாவானாள். சிறுவர்களே! சிறுமிகளே! இப்புது வருஷத்தில் என்ன செய்யப்போகிறீர்கள்? கோவில் சோடினை, ஆராதனைப்பாடல்கள், சுவிசேஷ வேலையும் உங்களுடைய தாயிருக்க இப்பொழுதே முயலுங்கள். மாகதத்தின் பின்னிலைமைக்குக் காரணம் இளமையின் முயற்சியே.

'முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்.'

கிறிஸ்மஸ் பாடல்

'வாசுதேவனே வந்தானுமையனே' என்ற மெட்டு.

1. ஜேசுபாலனே ஜனித்தாரின்றுமே
மாசில்லாதோராய் மாட்டுக்கொட்டிலிலே
காசினிதனில் நேசமுள்ளோர்கள் ஈசனருளாற் பாசமடைய
காட்சிதந்தாரே காணிவிடையர்க்கே.

2. சாஸ்திரிவந்தார் ஆத்திரத்துடனே
நேத்திரத்தினால் பார்த்தார் சேயனை
சாஸ்திரமுறைப் படியேபொன் தூப வர்க்கவெள்ளைப் போள
சாத்தினார்களே சாமி பாதத்தில். [மதனை

3. சங்கை யோசேப்பு மவர்நங்கை மேரியும்
பொங்கிக் களிப்பினா லிங்கிதங் கொண்டார்
அங்குமேபுகழ் தங்கும்படியே பங்கமொன்றிலாத் துங்கன
எழுந்தார் புவிமீதில் இம்பர்நாயனும். [வரும்

4. பூலோகத்துளோருடன் மேலோகத்துளோர்
போற்றினார்களே பவம் போக்குமீட்பரை
கோலமாயுடு விண்ணில்தயங்க கொடியவேரோது மண்ணில்
குரிசிலாய்மரி குமரன் ஜனித்தார். [தியங்க

THE NEEDS OF INDIA—A LECTURE

இந்தியா இன்னும் எவ்வெவ்விஷயங்களில் தேர்ச்சியடைய வேண்டுமென்பதைப் பற்றி உபந்நியாசம்

(தொடர்ச்சி)

13. நில சீர்திருத்தம்.

முன்காலத்தில் இந்தியா தேசம் ஒரு பெரிய காடாக இருந்ததென்றும், நாளடைவில் ஜனங்கள் பெருகிக் காட்டைச் சீர்திருத்தி நாடாக்கினார்களென்றும் வாசித்திருக்கிறோம். தற்சமயம் இத்தேசம் பயிர்த்தொழிலுக்கேற்ற தேசமாயிருக்கிறது. ஆகையால் சிலர் நன்செய் நிலங்களாகவும், சிலர் புன்செய் நிலங்களாவும் பண்படுத்திப் பயிரிட்டு முயற்சிக்குத்தக்க பலன் அடைகிறார்கள். எப்படியென்றால், சிலர் ஏராளமான நிலமிருந்தபோதிலும் கொஞ்ச பலனையும், சிலர் சொற்ப நிலமிருந்தபோதிலும் அதிக பலனையும் அடைகிறார்கள். காரணமென்னவெனில், இன்னின்ன நிலங்களில் இன்னமாதிரி உழவேண்டுமென்பதையும், இன்னமாதிரி விதை விதைக்க வேண்டுமென்பதையும், காலத்துக்கும் நிலத்திற்குந் தகுந்த எருப்போட வேண்டுமென்பதையும் அறியாமல் இருப்பதுதான். ஆகையால் இதை நிவிர்த்திசெய்து சீர்திருத்தமடையவேண்டுமென்றால், லால்குடியில் ஏற்படுத்தின மாதிரியும் சில முக்கியமான இடங்களில் பல நிபுணர்கள் சொல்லுகிற மாதிரியும், அநேக விவசாயத்தொழில்

பரீக்ஷித்துப்பார்த்த அறிவுடையவர் சொல்லுகிற மாதிரியும் செய்தால் தான் மேற்சொன்ன காரியம் தேர்ச்சிபெறும். இன்னும் அக்ரிகல்சரல் டிபார்ட்மென்ட் (Agricultural Department) விர்த்தியடைய வேண்டும். இன்னும் நம் தேசத்தில் தரிசாக விடப்பட்டிருக்கும் அநேக நிலங்களை ஜனங்கள் முயற்சியுடன் பண்படுத்தி உபயோகிக்க வேண்டும்.

14. தர்மவிஷயம்.

இத்தேசத்திலிருக்கிற செல்வவான்கள் மேலும் மேலும் செல்வம் சேர்ப்பதற்காக ஏழைகளுக்குப் பணத்தைக் கொடுத்து வட்டியைப் பறிக்க முயற்சியெடுக்கிறார்களே ஒழிய, இந்தியாவிலுள்ள ஏழைகளுக்கு உதவிசெய்கிறதே இல்லை. இதற்கு மாறாக நம்மவர் தர்மவிஷயமாக சத்திரம், சாவடி, குளம் முதலியவைகளைக் கட்ட முயற்சியெடுக்கவேண்டும். தர்மப் பள்ளிக்கூடங்கள், தர்ம ஆஸ்பத்திரிகள், அநாதைகள் தங்கும் சத்திரங்கள் முதலியவைகளுக்கு சர்க்கார் உதவி உண்டு. கவர்ன்மென்டாருடன் நம் தேசத்திலிருப்பவர்களும் மேற்சொல்லப்பட்டவைகளுக்காக உதவிசெய்ய முன்வருவார்களேயானால் நம் தேசத்துக்கு வெகு நன்மையுண்டாகும்.

15. சூதாடுதல்.

நம் தேசத்தில் பணத்தை வைத்துக்கொண்டு சூதாடும் வழக்கம் இப்பொழுதும் இருந்துவருகிறது. முன்காலத்தில் நளமகாராஜாவும் புஷ்கரமகாராஜாவும் சூதாட்டம் ஆடினதால் வந்த கேடுகளை வாசித்திருக்கிறோம். இந்த ஆட்டத்தைக் கைக்கொண்டவர்கள் தங்கள் பெற்றோர், மனைவி, மக்கள் முதலியவர்களின் ஞாபகம் மறந்து, தங்கள் சொத்து முழுவதையும் இழந்து, அநாதையாய் அலைகிற நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். ஆகையால், இவ்வழக்கத்தை அனுசரிக்கக்கூடாதென்றும் கட்டளை இருக்கிறது. சிலர் இதைக் கவனியாமல், அந்தரங்கமாய் இவ்வாட்டம் ஆடுகிறார்கள். ஆகையால் இதை தனவந்தர் முதல் ஏழைகள் வரையில் முற்றும் நிறுத்திவிட முயற்சியெடுக்கவேண்டும். மீறிநடப்பவர்களுக்கு மேலதிகாரிகளும் ஓர் சிட்சை ஏற்படுத்துவார்களேயானால் சூதாடும் வழக்கம் நம் தேசத்தைவிட்டு ஒழிந்து அவ்வழக்கத்தை மறுபடியும் கைக்கொள்ளாதிருக்க ஏதுவுண்டாகும்.

16. சிறுபிள்ளைகளை வளர்க்கும் விதம்.

சிறுபிள்ளைகளை வளர்க்கும் விஷயங்களில் நம் இந்தியர் அதிகக் கவலையீனமாயிருக்கிறார்கள். எப்படியென்றால் இந்தியாவில் சில தாய்மார், குழந்தைகளின் உடுப்பு, ஸ்நானம், ஆகாரம் முதலிய விஷ

யங்களைப்பற்றி அதிகக் கவலையீனமாயிருப்பதால், இத்தேசத்தில், பிளேக், காலரா, அம்மை முதலிய தொற்றுவியாதிகள் காணப்படுகின்றன. மேலும் இத்தேசத்திலிருக்கிற தாய்மார்கள் சிறுபிள்ளைகளைத் தங்களிஷ்டப்படி செய்ய விடுகிறதில்லை. உதாரணமாக, ஐரோப்பாவில் ஜெனிவா என்னும் பட்டணத்தில் ஏழு வயதுள்ள ஒரு பெண் ஒரு கடிகாரத்தின் சத்தத்தையும், முள் ஓடுகிறதையும் பார்த்து, யாரோ ஒரு மனிதன் கடிகாரத்திற்குள்ளிருந்து இச்சப்தம் செய்கிறுனென்று எண்ணி, கடிகாரத்தை உடைத்துப்பார்த்தாள். பிறகு அதிலிருக்கும் இயந்திரங்களைப் பார்த்து நூதன் காரியங்களை அறிந்துகொண்டாள். அப்பெண்ணின் பெற்றோர் அவளைக் கண்டிக்கவில்லை. இத்தேசத்திலோவென்றால், பிள்ளைகள் மண்ணிலும் மணலிலும் தங்களிஷ்டப்படி விளையாடினால் சரீரத்தில் மண்படிந்து அழுக்காய்விடும் என்று கண்டிக்கிறார்கள். இதினால் இத்தேசத்திலுள்ள பிள்ளைகளின் உள்ளான கருத்து, அவ்வளவாய் வெளிப்படுகிறதில்லை. இது பெரிய குறை. இதற்காக நம் தேசத்தில் சிறுவர்களுக்கென்று Kindergarten ஏற்படுத்தி இன்னுமதிகமாகப் போதிக்கவேண்டும். மேலும் நம் தேசத்துக் குடும்பஸ்திரீகள், தங்கள் வீடுகளில் உண்டாகும் வியாதியை நீக்கும் முறைகளைக் கற்றிருக்கவேண்டும். நம் தேசத்தில் சிறுவர்களுக்குக் கட்டாயம் அம்மைகுத்தவேண்டும். ஆனால் சிலர் பயந்துகொண்டு அப்படிச்செய்கிறதில்லை. இவைகளை யெல்லாம் தாய்மார் கவனித்து நடப்பார்களானால் சிசுக்கள் முன்னேற்றமடைவார்கள்.

17. பெருமை.

பெருமைகுணம் நம் தேசத்தில் எல்லாருக்கும் இருக்கிறது. எப்படியென்றால், தங்கள் சரீரத்தை அலங்கரித்துக்கொள்ளும் விஷயங்களிலும், கல்விப்பொருள் செல்வப்பொருள் முதலிய விஷயங்களிலும், பெருமை பாராட்டிக்கொள்ளுகிறார்கள். இப்பெருமையினால் அநேக பொய்யான வார்த்தைகளும் பேசுகிறார்கள். பெரியவர்களை மதிக்கிறதில்லை. இன்னும் இப்பெருமை அநேக பொல்லாப்பான செய்கைகளுக்கும் காரணமாகிறது. இது நம்முடைய தேசத்தில் குடிகொண்டிருந்தால், மற்ற தேசத்தைப்போல் முன்னுக்கு வருவது எப்படி? ஆகையால் நம் தேசத்தவர் பெருமை என்னும் குணத்தை விட்டுவிட முயற்சியெடுக்கவேண்டும்.

18. மற்றவர்களுடைய நன்மையைத் தேடல்.

மற்றவர்களுடைய நன்மையைத் தேடும் விஷயங்களில் நம் தேசத்திலிருப்பவர்கள், அதிக குறைவாகக் காணப்படுகிறார்கள். எப்படியென்றால், சுகாதாரத்துக்கு விரோதமாக ஒருவர் வீட்டிலிருக்கும்

அசுத்தத்தை மற்றவர்கள் வீட்டிற்கெதிரில் போடுதலும், ஜலதாரை வீதி முதலியவைகளை தங்களுக்குமட்டும் சுத்தப்படுத்திக்கொள்ளுதலு மாகிய தன்னயத்தையே மிகக்கருதி பிறர் நன்மையைக் கருதாமல் இருக்கிறார்கள். இப்படிச் செய்வதால் தொற்றுவியாதிகள் அதிகப் படுகின்றன. ஆகையால் இத்தேசத்திலுள்ள ஒவ்வொருவரும் முத லாவது தன்னைப்பற்றியும், தன் வீட்டைப்பற்றியும், தன் வீதியைப் பற்றியும், தன் கிராமத்தைப்பற்றியும், முறையே பட்டணம், தாலூகா, ஜில்லா முதலியவைகளைப்பற்றியும் மற்றவர்களின் நன்மைக்காக சுகா தாரவிதிகளைக் கவனித்து நடப்பார்களானால், இத்தேசத்தில் பலவித வியாதிகள் அற்றுப்போகும்.

19. பெண்களுக்கு கனம் கொடுத்தல்.

இத்தேசத்துப் பெண்களின் கனத்துக்கும் மற்ற ஐரோப்பா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளிலுள்ள பெண்களின் கனத்துக் கும் ஒப்பிட்டுப்பார்த்தால் எவ்வளவோ வித்தியாசம் காணப்படும். எப்படியென்றால், இந்தியாவில் பெண்கள் அடிமைகளைப்போல் கேவலமாய் எண்ணப்பட்டு அவர்களுக்கு கனம்கொடுக்கப்படுவதில்லை. ஆனால் மேல் நாடுகளில் முதலாவது பெண்களுக்குத்தான் கனம் வேண்டுமென்று நினைக்கிறார்கள். மேலும் அந்நாடுகளில் அநேக பெண்கள் படித்து பெரிய உத்தியோகங்களில் அமர்ந்து தேச நன் மைக்கென்று உழைக்கிறார்கள். இத்தேசத்தில் அப்படி அமருவது கஷ்டம். ஆகையால் பெண்களுக்கு இத்தேசத்தில் கனம் என்பது கிடைப்பதே இல்லை. இது சீர்திருத்தமடைந்தால் நல்லது.

20. நாகரீகம்.

இத்தேசத்தில், ஜனங்களுள் முன்காலத்திருந்த நாகரீகத்தையும் தற்சமயமிருக்கும் நாகரீகத்தையும் ஆராய்ந்துபார்ப்போமானால், இப் பொழுது கொஞ்சம் நாகரீகமுண்டாயிருக்கிறதென்றே சொல்லலாம். ஆனால், மற்ற மேல்நாடுகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால் இந்நாகரீகம் குறைவாகவே காணப்படும். எப்படியென்றால், இத்தேசத்திலுள்ளவர் தங்கள் தேகத்தில் பச்சை குத்திக்கொள்வதாலும், அசுத்தமான ஆடைகளை அணிவதாலும், சரியானபடி உடைதரிக்காமல் இருப்ப தாலும் நாகரீகம் குறைவென்றே காணப்படுகிறது. ஆகையால் இம்மாதிரியான வழக்கங்களை நீக்கி நாகரீகத்தில் விருத்தியடைய வேண்டும்.

21. ஏககாலத்தில் ஒரே அளவான செலவு.

இத்தேசத்தவர் ஜீவியகால முழுவதிலும் ஒரே அளவான செலவு செய்கிறதில்லை. எப்படியென்றால், பொருள் வருவாயுள்ள காலங்

களில், தங்களிடத்துள்ளபொருளை மட்டுக்குமிஞ்சி எந்த விஷயத்திலும் செலவிடுகிறார்கள். பொருளைச் செலவிட்டபிறகு கொடிய தரித்திரநிலைமைக்கு உட்படுகிறார்கள். ஆகையால், நம் தேசத்திலிருப்பவர்கள் எப்போதும் வரவுக்குத்தக்க செலவுசெய்ய முயற்சி எடுத்தால், நம் தேசத்தில் ஏழைகள் அதிகமாகக் காணப்படமாட்டார்கள். எக்காலமும் ஒரே அளவான செலவுசெய்ய முயற்சியெடுப்பார்களேயானால் இத்தேசத்தில் வறுமையென்பது தோன்றாதொழியும்.

22. ஐக்கியம்.

நம் தேசத்தார் ஒவ்வொருவருக்கும் ஐக்கியகுணம் அவசியம் வேண்டும். ஐக்கியம் இருந்தால்தான் மேற்சொல்லப்பட்ட இருபத்தொரு விஷயங்களும் தேர்ச்சிபெறும். மேலும் ஐக்கியம் என்பதும் முன்னுக்கு வரும். வியாபாரம், கைத்தொழில், கல்விவிஷயம், பொதுஜனக்கூட்டம் முதலியவைகளுக்கும் ஐக்கியம் வேண்டும். ஆகையால் இந்தியாதேசத்துக் குடிகளாகிய நாம் நம்முடைய மாட்சிமை தங்கிய அரசாட்சிக்கு ஐக்கியப்பட்டு, ராஜவிசுவாசமுள்ளவர்களாக இருந்து, நம்முள் ஐக்கியத்தை நிலைநாட்டி வாழ்ந்திருப்போமாக.

A. Govindammal,
Gojai Girls' School.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-ஆம் ஜனுவரி மீ

1	செ.	சங்.	116. 1—19
2	பு.	„	118. 1—13
3	வி.	„	118. 14—29
4	வெ.	„	119. 1—16
5	ச.	„	119. 17—32
6	ஞா.	„	119. 33—48
7	தி.	„	119. 49—64
8	செ.	„	119. 65—80
9	பு.	„	119. 81—96
10	வி.	„	119 97-112
11	வெ	„	119. 113-128
12	ச.	„	119. 129-144
13	ஞா.	சங்.	119. 145-160
14	தி.	„	119. 161-176
15	செ.	„	120. 1—7
16	பு.	„	121. 1—8
17	வி.	„	122. 1—9
18	வெ.	„	123. 1—4; 124. 1—8
19	ச.	„	125. 1—5; 126. 1—6
20	ஞா.	„	127. 1—5; 128. 1—6
21	தி.	„	130. 1—8; 131. 1—3
22	செ.	மத்.	1. 1—25; 2. 1—12
23	பு.	„	2. 13—23
24	வி.	„	3. 1—17
25	வெ.	„	4. 1—11
26	ச.	„	4. 12—25
27	ஞா.	„	5. 1—16
28	தி.	„	5. 17—32
29	செ.	„	5. 33—48
30	பு.	„	6. 1—18
31	வி.	„	6. 19—34

C. L. S. PRESS, MADRAS—1918